யா/ கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்

යා/ආචාර්ය ආ.ත්‍යාගරාජා මධ්‍ය මහා විද්‍යාලය.

J/Dr.A.THIYAGARAJAH MADYA MAHA VIDYALAYAM . KARAINAGAR.






இதழ்-1

# பசுமை





2015



வெளியீடு

சுற்றாடல் முன்னோடிக்குழு

கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி.,

காரைநகர்

மகுடவாசகம்

"உனக்கு நீயே உண்மையாய் இரு"

"To thine own self be true"

## தூரநோக்கு

நவீன உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமைமிக்க சமுதாயம்

## VISION

To make the society fully fledged with the ability to face the challenges of modern world.

## பணிக்கூற்று

தேசிய கல்விக் கொள்கைக்கேற்ப சமூக உறவினூடாக பௌதிக, மனித வளங்களை மேம்படுத்தி நவீன தொழினுட்பங்களினூடகத் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் ஆளுமைமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கல்.

## MISSION

In accordance with the national educational policy, develop the physical human resource using social relationship and impart a quality education by means of modern technologies and thereby bringing out students of enriched personality.

# கல்லூரிக் கீதம்

இராகம் - பிலஹரி தாளம் - ஆதி

பல்லவி

தாய் மலரடி பணிவோம் நம் கல்லூரி
தமிழ் எனும் அமுதினைப் பருகிட நிலை கொண்ட (தாய்)

அனுபல்லவி

உவமையிலாததோர் உமையவள் ஞானத்தை
உண்டருள் மதலையின் உயர் பெயர் தாங்கும் நம்
(தாய்)

சரணம்

*இராகம் - பூபாளம்*

அன்றொரு நாட்பல வாண்டுகளின் முன்னர்
அன்புறு நெஞ்சினன் ஆய சயம்புவின்
சிந்தனையில் தவயோகப் பொருளுருவில்
வந்தனை நம்தமை வாழ்விக்க மகிழ்வோடு
(தாய்)

*இராகம் - அடானா*

இன்னிசை யணிந்தநம் பொன்னிளம் செல்வியை
இன்தமிழ் சாயையின் ஏந்திழை அம்மையை
கற்பனைத் தேனினைக் காவிய ரசத்தினை
அற்புதத் தேவியை ஆவியைக் கருணையின்
(தாய்)

*இராகம் - சண்முகப்பிரியா*

இயலிசை யாயநற் பலவித கலைகளும்
ஏந்திய வாணியை விஞ்ஞான சக்தியை
பேணிய பெருந்தவப் பேற்றினை யூற்றினை
மாணியல் தமிழ்ப்பாவால் வாழ்த்துவம் வம்மின்கள்
(தாய்)

# சுற்றாடல் கீதம்

| | |
|---|---|
| தேவலோகத்தை தாய் நாட்டுக்கடுத்ததாய் | நினைப்போம் |
| தேவுலகசெல்வங்களை தாய் நாட்டி(லும்)ல் | காண்போம் |
| சூழலைக் காப்போம், பேணுவோம் | வளர்ப்போம் |
| இனிதே சதாதாய் நாட்டுடன் | இணைவோம் |
| | |
| முகில் தொடும் மலைவழியும் நதி நீரும் | நிலையே |
| வனத் தோப்பு, மலர்த் தோப்பு, பழத்தோப்பு | பலவே |
| குளிர் மூலம் உயிர்ப்பூட்டும் மருதமும் | இனிதே |
| சூழலைக் காத்தால் இயற்கையும் | சிநேகமே |
| | |
| பேராசை தன்னாசை பொதிகளாய் | சுமந்தே |
| நாட்டு வனவளங்களுக்கு கேடிழைப்ப | தேனோ |
| இயற்கை சீறிட உயிர் இனங்கள் அழிப் | பேனோ |
| சூழலைக்காப்பதே முழு நாட்டையும் | காப்பதே |
| | |
| இப்புவியுயிர் மனதில் கருணை மழை | பொழியட்டும் |
| மரஞ்செடிகொடிகளும் குளிர்ச்சியை | உணரட்டும் |
| இவ்வுலக இன்பங்களை உயிரினங்கள் | நுகரட்டும் |
| நம் சுவாசக் காற்றதற்கு உறுதுணை | யாகட்டும் |





| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பாடசாலை மகுட வாசகம், …… | 1 |
| 2 | கல்லூரி கீதம் | 2 |
| 3 | சுற்றாடல் கீதம் | 3 |
| 4 | பொருளடக்கம் | 4 |
| 5 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | 5 |
| 6 | வடமாகாணக் கல்வித் திணைக்கள சுற்றாடல் முன்னோடி ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்துச்செய்தி | 6 |
| 7 | வடமாகாண சுற்றாடல் ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி | 7 |
| 8 | கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி | 8 |
| 9 | Message from the in charge teacher of Environmental Society | 9 |
| 10 | சுற்றாடல் நேயமுள்ள ஓர் சமுதாயத்தின் உருவாக்கம் | 10 |
| 11 | காரைநகர்க் கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி | 11 |
| 12 | சுற்றாடல் உறுதிமொழி | 12 |
| 13 | சுற்றாடல் முன்னோடிகள் பற்றிய அறிமுகம் | 13 |
| 14 | எமது கல்லூரியும் சுற்றாடல் குழுக்களும் | 14 |
| 15 | ஈரநிலங்கள் (Wet lands) | 15 |
| 16 | சூழல் மாசடைதல் | 16 |
| 17 | இயற்கைத் துய்ப்பே இன்ப உலகம் | 17 |
| 18 | சூழல் சுத்தம் பேணி சுகமாய் வாழ்வோம் | 17 |
| 19 | சூழல் சுத்தம் பேணுவோம் | 18 |
| 20 | Sunshine | 19 |
| 21 | இலங்கையின் எதிர்கால சக்தித்துறை இலக்குகள் | 19 |
| 22 | Water cycle | 20 |
| 23 | பட்டுப்பூச்சி | 20 |
| 24 | உலக சுற்றுச் சூழல் தினம் | 21 |
| 25 | இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச உடன்படிக்கை | 22 |
| 26 | சுற்றாடல் தொடர்பான விசேட தினங்கள் | 23 |
| 27 | காரைநகர் பிரதேசத்தில் காணப்படும் சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் | 24 |
| 28 | கடற்கரைச் சூழற் தொகுதி | 25 |
| 29 | நன்றியுரை | 28 |



# மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வையும், சுற்றாடல் நட்புறவான உளப்பாங்குகளையும் வளர்ப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை கல்வி அமைச்சுடன் இணைந்து சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சி திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள 423 பாடசாலைகளில் 69 பாடசாலைகளில் இந் நிகழ்ச்சித் திட்டமானது தற்போது செயற்பட்டு வருகின்றது,

இவற்றில் யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயமானது தீவக கல்வி வலயத்தில் நான்கு(4) சுற்றாடல் முன்னோடிக் குழுக்களைக் கொண்ட பாடசாலையாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிகளின் முயற்சியினால் "பசுமை" எனும் சஞ்சிகை வெளியிடப்படுவதைக் குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

சுற்றாடல் நேய உணர்வுகளை பாடசாலை மாணவர்களிடமிருந்து மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதன் முதற்கட்டமாக இப் "பசுமை" சஞ்சிகை அமையும் என எதிர்பார்க்கின்றேன். இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என வாழ்த்துகின்றேன். இதன் மூலம் மாணவர்களின் திறமைகள் வெளிக் கொண்டு வரப்படும் என்பதுடன் சூழலை நேசிக்கின்ற, சூழலோடு இசைந்து சூழலை பாதுகாத்து வாழக் கூடிய ஓர் எதிர்கால சந்ததி உருவாகும் என்பது திண்ணம். சுற்றாடல் முன்னோடிகளாகிய உங்களின் அனைத்து விதமான சூழல் சார்ந்த செயற்பாடுகளும் சுற்றாடல் உணர்ச்சியுள்ள சமுதாயத்தின் தோற்றத்திற்கு ஊன்று கோலாக அமைய வேண்டும் என வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திருமதி விஜிதா சத்தியகுமார

பிரதிப் பணிப்பாளர்,

மத்திய சுற்றாடல் அதிகாரசபை,

யாழ்ப்பாணம்







# வடமாகாணக் கல்வித் திணைக்கள சுற்றாடல் முன்னோடி ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்துச்செய்தி

உலகமயமாக்கலின் விளைவாக எழுந்துள்ள சவால்களின் மத்தியில் எதிர்நீச்சலுடன் சமூகப் பொறுப்பையும், சுற்றாடல் நேயத்தையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைக் கல்வியின் பாற்பட்டதாகும். அவ்வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையும், கல்வித் திணைக்களமும் இணைந்து பாடசாலைகள் தோறும் சுற்றாடல் முன்னோடிக் குழுக்களை உருவாக்கி அவற்றினூடாக மாணவர் மத்தியில் சுற்றாடல் சார்பான விழிப்புணர்வையும், சுற்றாடல் சார் தேர்ச்சிகளையும் ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.


அவ்வகையில் தீவகக் கல்வி வலயத்தின் முதன்மைப் பாடசாலையான யா/கலாநிதி.ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் சுற்றாடல் முன்னோடிக் குழுக்கள் சுற்றாடல் நேயத்தன்மையுடன் சிறப்பாகச் செயற்படுவது பாராட்டுக்கு உரியதாகும். அவர்கள் அத்துடன் நின்றுவிடாது "பசுமை" எனும் சஞ்சிகையையும் வெளியிடுவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன். இச் சஞ்சிகையினூடாக மாணவர்களின் ஆக்கத்திறன் மாத்திரமன்றி பாடசாலைச் சமூகத்திற்கும் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

இச்சஞ்சிகையாக்கத்தில் பங்களித்த மாணவர்களுக்கும், நெறிப்படுத்திய ஆசிரியர் குழாத்தினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதுடன் பசுமை மிக்க சுற்றாடலை உருவாக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.**K.A** சிவனருள்ராஜா

உதவிக்கல்விப் பணிப்பாளர்(வடமாகாணம்)

சுற்றாடல் ஒருங்கிணைப்பாளர் (வடமாகாணம்)



2015 இல் சுற்றாடல் முன்னோடிகள் பச்சை வர்ண பதக்கத்துடன்



# வடமாகாண சுற்றாடல் ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தில் கலாநிதி.ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய சுற்றாடல் முன்னோடிக்குழு மாணவர்களால் வெளியிடப்படும் "பசுமை" என்னும் சுற்றாடல் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நாம் சுற்றாடலைக் காப்போம் சுற்றாடல் எம்மைக் காக்கும்"என்ற சுலோகத்துடன் கல்வி அமைச்சின் முழு ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அமுல்படுத்தியுள்ள சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் இன்று நாடு பூராகவும் பல்லாயிரம் பாடசாலைகளில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டம் பாடசாலைப் பாடநெறியில் சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை உட்படுத்துவதுடன் மட்டுமன்றி மாணவ மாணவிகளிடையே சுற்றாடற்கல்வி அறிவைப் பெறுவதுடன் சுற்றாடல் நட்பான எண்ணங்களை வளர்க்கவும் சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய அறிவு, செயல்ரீதியான பங்களிப்பு என்பவற்றை வளர்க்கவும் ஊக்கமளிக்கவும் பயன்தரும் நிகழ்ச்சித் திட்டமாக அமைகின்றது. இப்பணிக்கு தம்மை இணைத்துக் கொண்ட ஓர் அங்கமே சுற்றாடல் முன்னோடிகள்.

இந் நிகழ்ச்சித்திட்டம் யாழ் மாவட்டத்தில் பல பாடசாலைகளில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இம் மாவட்டத்தைச் சேர்ந்த காரைநகர் கலாநிதி.ஆ.தியாகராசா மத்திய மகா விததியாலயம செயற்றிறன்மிக்க அதிபரின் ஒத்துழைப்புடனும் வழிகாட்டலுடனும் பொறுப்புணர்வு, கடமையுணர்வுமிக்க முன்னோடிப் பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலுடன் முன்னோடி மாணவர்கள் கல்வி அறிவை பெறுவதுடன் அவர்களால் சுற்றாடலுக்கு நேசமான பல செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அவர்கள் முன்னோடிப்பதக்கம், பச்சைவர்ணப் பதக்கம் வென்றெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கத்திற்கு அமைய தாம் அறிவடைதல் மட்டுமன்றி மற்றவர்களையும் அறிவூட்ட வேண்டும் என்பதையும் மறக்காது இன்று இப் பாடசாலையில் "பசுமை" எனும் சஞ்சிகைச் சுற்றாடல் முன்னோடிகளால் வெளியிடப்படுகின்றது. இச் சஞ்சிகை தொடர்ந்து விருட்சமாக வளரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அத்துடன் மிகவும் ஊக்கத்துடனும், ஆக்கத்துடனும் சேவைசெய்து கொண்டிருக்கும் சுற்றாடல் முன்னோடிக் குழுவினர், அதிபர், முன்னோடிப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த செயற்பாட்டை பாராட்டி எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. பொ. சண்முகதேவன்
மாவட்டசுற்றாடல் முன்னோடி ஆலோசகர்
யாழ்ப்பாணம்



# கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி


எமது கல்லூரியின் சுற்றாடல் முன்னோடிக்குழு மாணவர்களின் முதலாவது வெளியீடாக வெளிவரும் "பசுமை" சஞ்சிகை மாணவர்களின் படைப்பாற்றலுக்கு வித்திடுவது மாத்திரமன்றி அவர்களின் பசுமை நிறைந்த நினைவுகளையும் தன்னகத்தே கொண்டு வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடை-கின்றேன். இம் மாணவர் குழாத்தினரின் சுற்றாடல் நேயத்தன்மை, சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாராட்டுதற்குரியவை.


2013ஆம் ஆண்டு 25 மாணவர்களுடன் முதன் முதலாக திருமதி. சி. வாகீசன். ஆசிரியரின் நெறிப்படுத்தலின் கீழ் உருவாக்கப்பட்ட குழுவினர் அவர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டினால் முறையே மஞ்சள் வர்ணப்பதக்கத்தையும், பச்சை வர்ணப்பதக்கத்தையும் பெற்று இவ்வருடம் வெள்ளி வர்ணப்பதக்கத்தைப் பெறுவதற்கான தயார்நிலையில் உள்ளனர்.

முதலாம் அணியினரின் ஆற்றல் மிக்கசெயற்பாட்டினால் கவரப்பட்டு 2014 ஆம் ஆண்டு புதிதாக உருவாக் கப்பட்ட குழுவினர் திருமதி அ.இராசசிவம் ஆசிரியரின் வழிகாட்டலினூடாக மஞ்சள் வர்ணப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.அவர்கள் இவ்வருடம் பச்சை வர்ணப்பதக்கத்தைப் பெறுவதற்கான தயார்நிலையில் உள்ளனர். அத்துடன் நின்றுவிடாது இவ்வருடமும் தரம் 6, 7 ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மேலும 50 மாணவர்கள் சுற்றாடல் முன்னோடிகளாக தம்மை இணைத்துக் கொண்டு திருமதி பு.கம்சன், திருமதி க.சந்திரமோகன் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலின் கீழ் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர்.

இம்மாணவர்கள் பாடசாலைப் பசுமை பேணல், திண்மக்கழிவு முகாமைத்துவம், நீர் முகாமைத்துவச் செயற்பாடுகளை செயற்படுத்துவதுடன் "பசுமை" எனும் சஞ்சிகையையும் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இம் மாணவர்களின் எதிர்காலம் சிறப்புறவும் "பசுமை" என்றென்றும் பசுமையுடன் தொடர்ந்து வெளிவரவும் வாழ்த்துகின்றேன்.

திருமதி வாசுகி தவபாலன்
அதிபர்,
யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.





# Message from the in charge teacher of Environmental Society

It is indeed a great pleasure to write this message to the magazines “Pasumai” published by the Environmental Society of J/Dr.A.Thiyagarajah M.M.V., Karinagar.

The Environmental society is one of the active society take a keen interest in clearing our school environment, planting vegetable plants as well an ornamental plants. They separate the garbage in our school Premises.

Developing the habit of writing-articles are good thing. Publication of magazine. Provides opportunities to the students to make the article and encourage them to search about the environment. Students gained new knowledge by writing article to the magazine.

I am happy to note that the environmental society of J/Dr.A. Thiyagarajah M.M.V. is providing an opportunity to students to develop their writing habits through the publication of “Pasumai”

I congratulate the Environmental society for their untiring efforts and wish the society success in all its endeavors.

**Mrs S.Vakeesan**
Teacher in Charge
Environmental society
J/Dr.A.Thiyagarajah M.M.V.






# சுற்றாடல் நேயமுள்ள ஓர் சமுதாயத்தின் உருவாக்கம்

இயற்கை வளங்கள் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட கொடைகளாகும். அவற்றைப் பேணிப் பாதுகாத்து நாமும் பாவித்து அதனை எதிர்காலச் சந்ததியினரின் பயன்பாட்டுக்கும் அன்பளிப்புச் செய்வதும் எமது தலையாய கடமையாகும். இப்பாரிய பொறுப்பு மாணவர்களைச் சேர்ந்ததாகும். இதற்காக சுற்றாடல் நேயமுள்ள கூருணர்ச்சியுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்காக பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடி நிகழச்சிதிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் சுற்றாடல் முன்னோடி அங்கத்தவர்களில் ஏற்படுத்தப்படும் சுற்றாடல் நட்புறவான உளப்பாங்குகள் அங்கத்தவர்களின் மூலமாக ஒட்டு மொத்த மக்களின் உள்ளங்களில் கொண்டு சேர்க்கப்படுகின்றது. இச் சுற்றாடல் சம்மந்தமான பிரச்சனைகளை இனங்காண்பது அவற்றுக்கான தீர்வு காண்பது அதற்கான கருத்திட்டங்களை உருவாக்கி அதனை பிரயோக ரீதியில் அமுல்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை சுற்றாடல் முன்னோடிகள் செய்வதன் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த ஓர் சுற்றாடலைக் கட்டியெழுப்ப முடியும்



தீவகக் கல்வி வலயத்தில் சுற்றாடல் முன்னோடிக்குழுக்கள் நான்கினைக் (4) கொண்ட பாடசாலையாக யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயமானது செயற்பட்டு வருகின்றது. இப் பாடசாலை சுற்றாடல் முன்னோடிகளினால் வெளியிடப்படும் "பசுமை" எனும் சஞ்சிகையானது பாராட்டுக்குரியது. இச் சஞ்சிகையானது சுற்றாடல் முன்னோடிகளின் சுற்றாடல் சார்ந்த ஆக்கங்களின் படைப்பாகும். இப் பசுமையின் ஆக்கங்கங்கள் சுற்றாடல் முன்னோடிகளின் சூழல் நேய உணர்வின் வெளிப்பாடாகும். இப் பசுமை சஞ்சிகை போன்று மேலும் பல நல் ஆக்கங்கள் சுற்றாடல் முன்னோடிகளினால் எதிர் காலத்தில் உருவாக்கப்படல் வேண்டும். அத்துடன் சூழல் நேய உணர்வலைகள் பாடசாலையிலிருந்து கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம் என நாடாளாவிய ரீதியில் ஏற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஓர் சுற்றாடல் நட்புறவான சமுதாய தோற்றம் பெற சுற்றாடல் முன்னோடிகளின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி கல்யாணி விசுவநாதன்
சுற்றாடல் உத்தியோகத்தர்



## காரைநகர்க் கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

சுற்றாடல் முன்னோடிகள் தாம் வாழும் சூழலைப் புரிந்து கொள்வதற்கு அவசியமான அறிவையும் உசித மனப்பாங்கையும் உருவாக்கிக் கொள்ள ஏராளமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டிய தேவை உள்ளது. இதன் ஒரு பகுதியாக இவர்கள் பசுமை எனும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இவர்களது சஞ்சிகை சிறப்பாக வெளி வர எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு. ச. அரவிந்தன்**

காரைநகர்க் கோட்ட சுற்றாடல் *முன்னோடி* ஆணையாளர்




பாடசாலைத்தோட்டத்தில் மாணவர்கள் பயன்பெறும் போது



E-waste திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டின் போது




2013 இல் பாடசாலைக் கவின்நிலை



1.1.2015 இல் பாடசாலைக் கவின்நிலை

# சுற்றாடல் உறுதிமொழி

மரஞ் செடி கொடிகள், அருவி கால்வாய் ஆறு கடலும்
அவற்றிடை வாழும் அனைத்து உயிர்களும்
அவற்றைத் தாங்கி நிற்கும் பூகோளமும்
நன்கே சமநிலையாய்த் திகழ வழி செய்யும்
உறவினைச் சதா பேணி
அறியாமை இருளை நீக்கி அறிவுத் தீபமேற்றி
முழுமூச்சாய், கடினமாய் உழைத்து
எமது சுற்றாடலை
உலகம் உய்யவே காத்து நிற்க
திடஉறுதியுடன் அர்ப்பணமாகுவேன்
என இங்கு உறுதி பூணுகின்றேன்.





# சுற்றாடல் முன்னோடிகள் பற்றிய அறிமுகம்

இத் திட்டமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பாடசாலைகள் தோறும் இந்நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்திச் செயற்படுத்தப்படுகிது. ஒரு பாடசாலையை எடுத்துக் கொண்டால் அதிபரின் தலைமையின் கீழ் இதற்கு பொறுப்பாக ஒரு உத்தியோகத்தர் இருப்பார். இவர் மாணவர்களை குழுவிற்கு தெரிவுசெய்வார். ஒருகுழுவில் 25 மாணவர்கள் காணப்படுவர். 25 பேர் கொண்டகுழுவில் தலைவர், உபதலைவர், 3 உதவித் தலைவர்களின் கீழ் குழுவாக மாணவர்கள் அடங்குவார்கள்.

மாணவர்களை 6ம் தரம் அல்லது 7ம் தரத்திலிருந்து தெரிவு செய்யலாம். மாணவர்கள் பெற்றோர் அனுமதியுடன் இணைத்துக் கொள்ளப்படுவார்.

## பாடசாலைச் சுற்றாடல் முன்னோடிக் குழுவின் அமைப்பு

அதிபர்

↓

முன்னோடிப் பொறுப்புஉத்தியோகத்தர்

↓

தலைவர் - 01

↓

உபதலைவர் - 01

↓

உதவித் தலைவர் - 03

↓

முன்னோடிஅங்கத்தவர்கள் - 20

இவ்வாறு சுற்றாடல் முன்னோடிக் குழுவில் ஒரு குழுவாகவோ அல்லது பல குழுவாகவோ மாணவர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இவ்வாறு செயற்படும் மாணவரின் செயற்திறனை இனம் கண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 5 வகையான பதக்கங்களை ஒன்றன்பின் ஒன்றாக அவர்களின் திறமை, தேர்ச்சி அடிப்படையில் வழங்கும். அவை,

1. மஞ்சள் வர்ணப் பதக்கம்
2. பச்சை வர்ணப் பதக்கம்
3. வெள்ளி வர்ணப் பதக்கம்
4. தங்க வர்ணப் பதக்கம்
5. ஜனாதிபதிப் பதக்கம்

முதலாவது பதக்கம் பெறுவதற்கு ஆறு விரிவுரைகளில் கலந்து கொண்டு மாணவர் உரியசெயற்பாடுகளை பூர்த்திசெய்ய வேண்டும். பின்னர் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும்.

இரண்டாவது பதக்கமான பச்சைவர்ணப் பதக்கத்திற்காக நான்கு விரிவுரைகளில் கலந்து கொண்டு மாணவர் உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

வெள்ளி வர்ணப் பதக்கத்திற்காக நான்கு செயற்பாடுகளைப் பூரணப்படுத்தி பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும். பரீட்சிப்பு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ,சுற்றாடல் முன்னோடி வலய ஆணையாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்படும்.

தங்கவர்ணப் பதக்கத்திற்காக நான்கு செயற்பாடுகளை பூரணப்படுத்திய பின் பரீட்சிப்புக்குழு பரீட்சிப்பை மேற்கொள்ளும் இறுதியாக ஜனாதிபதி பதக்கத்திற்காக கருத்திட்டம் ஒன்றை சூழல் சம்மந்தமாக முன்வைத்து பொறுப்பாசிரியரினால் சிபார்சு செய்து அனுப்பப்படுதல் வேண்டும். இது நேர்முகத் தெரிவின் மூலம் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி பதக்கத்தை வெற்றியீட்டிக் கொள்வதன் மூலம் பல்கலைக்கழக பிரவேசத்தின் போது நான்கு(4) புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

## எமது கல்லூரியும் சுற்றாடல் குழுக்களும்

எமது பாடசாலையில் சுற்றாடல் முன்னோடிகள் 25 பேர் கொண்ட குழுவானது அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் 15.05.2013 அன்று எமது பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் செல்வி பி.ஆரணியின் வழிகாட்டலில ஆரம்பிக்கப்பட்டது. 25 மாணவர்கள் இணைந்து கொண்டனர். பொறுப்பாசிரியராக திருமதி.சி.வாகீசன் அதிபரால் நியமிக்கப்பட்டார். பின்னர் எமது பிரதேசத்திற்கான புதிய சுற்றாடல் உத்தியோகத்தராக திருமதி. கல்யாணி விசுவநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டார். குழு 1 மாணவர்கள் 2014ம் ஆண்டு மாசி மாதம் மஞ்சள் வர்ணப் பதக்கத்தை பெற்றுக்கொண்டனர்.

இரண்டாவது குழு 01.04.2014 (குழு-2) அன்று பொறுப்பாசிரியர் திருமதி.அ.இராசசிவம் அவர்களால் அதிபரின் தலைமையில் உருவாக்கப்பட்டது. இவர்கள் 2015ம் ஆண்டு சித்திரை மாதம் தமது மஞ்சள் வர்ணப்பதக்கத்தை பெற்றுக்கொண்டனர்.

குழு 1 மாணவர்கள் 31.01.2015 அன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரியில் நடைபெற்ற சுற்றாடல் முன்னோடிகளுக்கான பாசறையில் பச்சை வர்ணப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டனர். தற்போது குழு 1 மாணவர்கள் வெள்ளி வர்ணப் பதக்கத்திற்கான தயார்ப்படுத்தலில் உள்ளனர். குழு 2 மாணவர்கள் பச்சை வர்ணப்பதக்கத்திற்கான தயார்ப்படுத்தலில் உள்ளனர். தற்போது பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி.கல்யாணி அவர்களின் ஆர்வத்தினால் குழு 3, குழு 4 ஆகியன திருமதி.பு.கம்சன், திருமதி.க. சந்திரமோகன் ஆகியோர் தலைமையில் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இந்நான்கு குழுக்களும் பாடசாலையில் இயற்கைச் சூழலைப் பேணுவதிலும், அழகுபடுத்துவதிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதிபரதும் பொறுப்பாசிரியர்களதும் பூரண ஒத்துழைப்புடன் மாணவர்களது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலையின் சிறிய தோட்டங்கள் அமைத்து அதிலிருந்து கிடைக்கும் மரக்கறிகளை பாடசாலையின் மதிய உணவிற்கு வழங்கி சிறு தொகைப் பணத்தை பெற்றுக் கொண்டனர். அழகுத் தாவரங்களைப் பேணுவதிலும் மாணவர்கள் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

# ஈரநிலங்கள் (Wet lands)

இலங்கையில் நான்கு காலநிலை வலயங்க்ள காணப்படுகின்றன. ஈரவலயம், இடைவலயம், உலர்வலயம், வறண்டவலயம் என்பனவாகும்.ஈரநிலம் எனப்படுவது கடல் மட்டத்திலிருந்து 2500 அடி உயரமுடையது. வருடம் முழுவதும் பரவலான மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. வரட்சியான காலப்பகுதி காணப்படுவதில்லை. தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் பெருமளவு மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றது. சராசரி வெப்பநிலை 27°C இடையிலானதாகும்.

இலங்கையின் சூழல் தொகுதிகளை அவற்றின் அமைவிடத்தினடிப்படையிலும் அமைப்பினடிப்படையிலும் 4 வகையாகப் பிரிக்கலாம். இவற்றில் உள்நாட்டுக்குரிய ஈரநிலங்களும், நீர்நிலைகளும், கடற்கரையோரச் சூழற்தொகுதிகளும் ஈரநிலங்களாகும். அருவிகள், ஆறுகள், குளங்கள் வெள்ளப் பெருக்குக்குரிய சமதரைகள் சேற்று நிலங்கள் ,வில்லுகள் போன்றவை உள்நாட்டுக்குரிய ஈரநிலங்களாகும்.

**ஈரநிலங்களின் பயன்பாடுகள்**

ஈரநிலங்கள் மழைநீரைக் களஞ்சியப்படுத்துகின்றன. போசணைப் பொருட்களை அகற்றுவதன் மூலம் பிரித்தழிப்பதன் மூலம், பயன்படுத்துவதன் மூலம் ஈரநிலங்கள் நீரின் தரத்தை மேம்படுத்துகின்றன. இவ்வாறு மேற்பரப்பினூடாக ஓடி வடிந்து நீர் கொண்ட பரப்புகளை வந்தடையும், சேதனப் பொருட்களையும் பாதிக்கின்றன. ஆறுகள் வெள்ளப் பெருக்குக்கு உட்படும் சந்தர்பங்களில் அடையல்கள் படியுமிடங்களாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன. உலர்காலங்களில் தேக்கிவைத்த நீரை கீழ்ப்புறமான பகுதிகளுக்கு அனுமதிப்பதன் மூலம் வெள்ளப் பெருக்கினால் உண்டாகும் பாதிப்பை குறைக்கின்றன. அருவிக் கரையோரங்களையும், கரைகளையும் மண்ணரிப்பினின்றும் பாதுகாக்கின்றன. உலர்காலங்களில் குறைவடையும் நிலக்கீழ் நீரினளவை நிரப்பிக் கொள்வதிலும், நிலக்கீழ் நீரினளவை பேணுவதிலும் பயன்படும்.

ஓடு கொண்ட மீன்கள் மற்றும் பொருளாதார பயன்மிக்க மீன் மற்றும் விலங்குக்குரிய வாழிடம், இன விருத்தியிடம், ஓய்வுகொள்ளுமிடம் போன்றவற்றை வழங்குகின்றன. இவற்றுட் பல ஆபத்துக்கிலக்காகிய இனங்களாகவும் அரிய இனங்களாகவும் காணப்படலாம். பொழுது போக்கு நடவடிக்கையின் பொருட்டான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன. உதாராணமாக பறவைகளை அவதானித்தல் நீர் வாழ் பறவைகளினது வேட்டையாடுகை, புகைப்படக்கலை, வகுப்பறைக்கு வெளியிலான கற்றற் செயற்பாடுகள் போன்றனவாகும். ஈரநிலங்கள் பல பயன்பாடுகளைக் கொண்டிருப்பதால் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது.

திருமதி சி.வாகீசன்
**(B.Sc., Dip in Edu)**

# சூழல் மாசடைதல்

ஆரம்பத்தில் மனிதனின் பாதுகாப்புக்காக காணப்பட்ட இயற்கைச் சூழலை இன்று மனிதன் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதற்கு காரணம் மிகையான சனத்தொகைப் பெருக்கமே என்று பொதுவாக சொல்லப்படுகிறது. மனிதனானவன் தன் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தான் வாழும் சூழலைப் பயன்படுத்துகின்றான். அப்போதெல்லாம் வரையறையற்ற தாக்கங்கள் எமது சூழலில் ஏற்படத்தான் செய்யும். தவிர்க்க முடியாத இத் தாக்கங்களால் மனிதனின் ஆரோக்கியமான வாழ்வுக்கு மட்டுமல்ல பிற உயிரினங்களின் வாழ்வுக்கும் பெரும் பிரச்சனையாக உள்ளது. இயற்கை வளங்களான நிலம், நீர், காற்று என்பன அசுத்தமடைவதுடன் ஓசோன் படை சிதைவடைதல், பச்சை வீட்டுத் தாக்கம், அமில மழை, தீய கதிர்வீச்சு போன்ற எதிர் விளைவுகளும் ஏற்படுவதினால் மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இயற்கை சமநிலை குழம்புவதற்கு செயற்கை சூழலும் காரணமாகின்றது.

சூழலில் உள்ள உயிரற்ற அல்லது சடத்துவ கூறுகள் மற்றும் உயிரங்கிகள் நாம் வாழ்வதற்கு தேவையானவற்றை வழங்குகின்றன. அவை சூழலில் ஒரு சமநிலையைப் பேணி வருகின்றன. ஆனால் முன்னேறி வரும் நவீன உலகில் மனிதனின் தேவைகள் பன்மடங்காகி விட்டன. இன்று மனிதனால் சூழலில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் சூழல் மாசடைவதற்கு காரணமாய் அமைந்து விட்டன. இதனை செயற்கைச் சூழல் எனலாம்.செயற்கைச் சூழல் ஆனது மனிதனின் தேவையின் விளைவாகவே சூழலியற் காரணிகளைக் குழப்புகிறது. இயற்கைச் சமநிலை குழம்ப சூழற்தொகுதியில், சுற்றாடலில் அவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இயற்கைச் சமநிலையைப் பேணி சுற்றாடலைப் பாதுகாக்கும் கடமை மனிதனுக்கு அவசியமானது. இந்த வகையில் பார்க்கும் போது இயற்கைச் சமநிலையைக் குழப்பும் பிரதான காரணி மனிதன் தான் என்பது புரியும். சூழல் மாசடைதலானது இன்று தேசிய ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. அது ஒரு சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால் இதனை மையமாகக் கொண்டு இன்று சூழல் மாசடைதல் குறித்த தடுப்பு நடவடிக்கைகளை சகல தரப்பினரும் மேற்கொள்வது அவசியமாகிறது.இரசாயன பௌதீக , உயிரியல் நோக்கிலே பல அணுகுமுறைகள் இப்போது கையாளப்படுகின்றன.

சூழல் மாசடைதலில் பங்கு வகிக்கும் பின்வரும் இதர காரணிகளை நாம் இனம் கண்டு வைத்திருத்தல் அவசியமாகும்.

- அதிகரித்து வரும் சனத் தொகைப் பெருக்கம்
- உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய அதிகரிக்கும் விளை நிலங்கள்
- புதிதாக தோன்றும் தொழிற்சாலைகளும் கைத்தொழிற் பேட்டைகளும்

மனிதனாகிய நாம் எமது வாழ்வுத் தேவையையும் வளங்களையும் உயர்த்தும் போது எம்மை அறியாமலே சூழல் அசுத்தமாவது தவிர்க்க முடியாததாகும். சூழலின் வளமும், செயற்பாடுகளும் பல்வேறு பரிமாணங்களால் அசுத்தமடைந்து, மனித வாழ்வுக்கும் ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பும் மனிதராய்ப் பிறந்த எங்கள் ஒவ்வொருடைய பொறுப்பும் கடமையுமே ஆகும்

பா.சிவராஜினி
தரம் 9A
குழு - I

## இயற்கைத் துய்ப்பே இன்ப உலகம்

நேற்றுப் பார்க்க நேர்ந்த படத்தை இன்றுமே
நேயர் ஒருவர் நேரில் பார்க்க அழைத்திட
நேற்றுப் பார்க்க நேர்ந்த செய்தி சொல்லியே
நேர்தல் இன்றி நேயர் தம்மை விடுத்ததென்ன


நேற்றுத் தந்த நேர்த்தியான சுவை தனை
நேய மிக்கார் நிறைவாய் இன்றும் நேர்ந்திட
நேற்றைப் போன்ற நேர்த்தி இன்று கண்டிட
நேரவில்லை நினைத்து நினைத்துப் பார்த்ததேன்

நேற்றை என்ன நேற்றை நேற்றை நேற்றெல்லாம்
நொந்து நொநது நேர்ந்து துய்ப்பினும்
ஊற்றுப் பெருக்காய் உவகையுட்டும்
இயற்கையின் உவகை என்னே!

என்றும் இன்பம் எங்கும் இன்பம் என்னவே
நன்றாய் நாளும் ஓங்கும் இயற்கையில்
ஒன்றி ஒன்றி ஒன்றாய் ஆகித் துயர்த்திடின்
என்றும் இன்ப உலகம் என்ன தன்னதே!

கு.கஜனிகா

9B குழு – 1



## சூழல் சுத்தம் பேணி சுகமாய் வாழ்வோம்

சுற்றுச் சூழல் எப்பொழுதும்
சுத்தம் நித்தம்

குற்றம் குறைகளை களைந்து – நாளும்

கூடி ஒன்றாய் வாழ்வோம்

சூழல் மாசடைவதனை நாம்

சும்மாய் பார்த்து இருந்துவிட்டால்

அழிவு விரைவில் எம்மை நோக்கி

ஆர்ப்பரித்து வந்துவிடுமே

காடு களனி கரையோரங்கள்

கண்டபடி அழிவதுண்டு

கூடும் திண்ம கழிவுகளினால்

குடிநீர் கெட்டுப் போவது உண்டு

கோடிக் கணக்கில் சாலைகளில்

குதித்துப் பாயும் ஊர்திகளும்

வளர்ந்து வரும் தொழிற்சாலைகளும்

வளி மாசடைய செய்திடுமே

நாளும் நல்ல மரம் தனையே

நாளும் நாட்டி நீர் இடல்

குளிர்ந்த காற்றை எமக்கீந்து

நலங்கள் தந்து உதவிடுமே

இயற்கை அன்னை நமக்கீந்த

இனிய சூழல் இதுவாகும்

இயன்ற வரையில் சூழலைப்பேணி

இன்பமாய் வாழ்ந்திடுவோம்

ச.சிவரூபி
குழு – 1
தரம் 9 C

# சூழல் சுத்தம் பேணுவோம்

"சுத்தம் சுகம் தரும்" என்பது முதுமொழி நாம் நோயின்றி வாழச் சுத்தம் பேணுதல் மிக மிக அவசியம். சுத்தமான காற்று, சுத்தமான நீர், சுத்தமான உணவு, சுத்தமான உடை, சுத்தமான வசிப்பிடம் என்பன சுக வாழ்வுக்கு இன்றியமையாதவை.

சுத்தம் என்று கூறும் போது முதல் நமது உடற் சுத்தம் பேணப்பட வேண்டும். அடுத்து நம் வீட்டில் உள்ளோரின் சுத்தத்தைப் பேண வேண்டும். உடலில் அழுக்குப் படியாது உடலை நன்கு தேய்த்து குளிக்க வேண்டும். பற்களை நன்கு துலக்குதல், நகங்களில் அழுக்குச் சேராதபடி அவற்றின் நுனிகளை காலத்துக்கு காலம் வெட்டிச் சீராக்குதல, உடைகளை தோய்த்து நன்கு உலரவிட்டு அணிதல் போன்ற நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அவை மட்டும் போதாது அழுக்கு நிறைந்த இடங்களில் நாம் வாழக் கூடாது. அழுக்குப் பொருட்களை வீடுகளில் சேரவிடக் கூடாது. அவற்றை கண்ட கண்ட இடங்களில் வீசக் கூடாது. அவற்றை உடனுக்குடன் அகற்றிவிட வேண்டும் இவற்றை தேக்கிவிட்டால் தொற்று நோய்க்கிருமிகள் இவற்றிலிருந்து தோன்றி மக்களைப் பாதிக்கும். இதனால் மக்கள் வாழ்வில் சுகம் கெடும். தொற்று நோய்கள் பரவும்.

வீடு, சுற்றாடல் என்பன எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். சுற்றாடலில் அழுக்கு நீர் தேங்க இடமளிக்கக் கூடாது. சுற்றாடல் சுத்தமின்மையால் மலேரியா, டெங்கு போன்ற நோய்களைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாக்க வழியேற்படும் இதனால் நாம் மட்டுமன்றி நமது குடும்பத்தினர் மட்டுமன்றி நாட்டுமக்களும் பாதிப்படைவர். சூழல் சுத்தம் பேணும் செயல்கள் வரும் முன் காக்கும் செயலாகும். நீர், நிலம், காற்று அனைத்தும் மாசுறாது காத்தல் நமது கடமையாகும். இன்றும் கூடச் சிலர் தம் வீட்டுக் குப்பகளை வீதியோரங்களிலும் அடுத்தவர் வீட்டு வளவுகளிலும் வீசி விட்டுச் செல்வதைக் காண்கின்றோம். அத்தகைய செயல்கள் சூழலை பெரிதும் பாதிக்கும் செயல்களாகும். சூழல் சுத்தம் பேணுதல் நமது தலையாய கடமை என்பதை மக்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். பொது இடங்களில் அழுக்குப் பொருட்களை வீசுவதை விடுத்து அவற்றை அதற்கென உள்ள குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். சுத்தமான காற்றும் தூய நீரும் கிடைத்திட வேண்டுமானால் கண்டிப்பாக நாம் சூழல் சுத்தம் பேணி நடக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். தொற்று நோய்கள் நம்மை அணுகாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நமது அழுக்குப் பொருட்களும் நீரில் வந்து கலப்பதால் நீர் நிலைகள் மாசாகின்றன. அதிகரித்து வரும் வாகனப் பெருக்கமும் வானளாவ எழுப்பப்படும் மாடிகளும் சுத்தக் காற்றை நாம் சுவாசிக்க முடியாதவாறு தடுக்கின்றன. வாகனங்களும் தொழிற்சாலைகளும் வெளியேற்றும் புகையினால் காற்று மாசடைகிறது. இத்தகைய சூழலை மாசுபடுத்தும் செயல்களைத் தவிர்த்தல் வேண்டும். அதன் மூலமே சூழல் சுத்தத்தைப் பேண முடியும்.உன்னைத் திருத்திக் கொள் உலகம் திருந்தும் என்பது அனுபவரீதியான ஆன்றோர் வாக்கு.இதனை நாம் நன்குணர்ந்து நம்மையும் வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க முயற்சிக்க வேண்டும்.

சூழல் சுத்தம் பேணுவோம்! சுக வாழ்வு காண்போம்!.


**A/L(2016) Technology Students**

## Sunshine

Sun plays a very crucial role in determining the weather of an area. The heat of the sun warms the surface of the Earth near the equator. As a result, the air of surrounding region also gets heated up. The hot air being lighter rises up and cooler air from the poles moves in to fill the space. This process results in stirring up winds.

Moisture and humidity also depend on sunshine. Heat from the sun evaporates the water from the seas which results in cloud, their moisture falls as rain

**Mas.E.Gobinath**




## இலங்கையின் எதிர்கால சக்தித்துறை இலக்குகள்

- ❖ 2015 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்பாக தொடர்சிசியான அடிப்படையில் தேசத்தின் 100% மக்களுக்கு இயலுமான வகையில் மின்சாரம் வழங்குதல்.
- ❖ 2015 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கதக்க சக்தி வளங்களில் இருந்து மின் உற்பத்தியை 50% மாகவும் 2020 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கதக்க மற்றும் ஏனைய சுதேச சக்தி வளங்களில் இருந்து மொத்தத் தேவையை பூர்த்தி செய்தல்.
- ❖ 2025 ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள மின்சார உற்பத்தியின் அளவை 4050 மெகாவாட்ஸாக அதிகரித்தல்
- ❖ 2020 ஆம் ஆண்டளவில் மன்னார் குடாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுதேச வாயு வளங்களை பாவித்து ஆகக் குறைந்தது 1000 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
- ❖ 2020 ஆம் ஆண்டளவில் உற்பத்தி செலவுகளைக் குறைக்கவும் மேலும் இழப்பற்ற உற்பத்தியை அதிகரிப்பதற்காக நீர் மின்சார உற்பத்தியை 2000 மெகாவாட்ஸாக அதிகரித்தல்.
- ❖ 2025 ஆம் ஆண்டளவில் சக்தித்துறையின் Cartoon Foot Print ஐ 5% ஆல் குறைத்தல்
- ❖ 2020 ஆம் ஆண்டளவில் மின்சாரத்தை எடுத்துச் செல்லல் மற்றும் விநியோக வலைப்பின்னலின் தொழில்நுட்பவியல் மற்றும் வர்த்தக இழப்பை 11% இல் இருந்து 8% ஆக குறைத்தல்.
- ❖ பாதுகாத்தல் மற்றும் வினைத் திறனுடான வருடாந்த சக்தித் தேவை வளர்ச்சியை 2% ஆல் குறைத்தல்.
- ❖ 2025 ஆம் ஆண்டளவில் எமது சொந்த பெற்றோல் சுத்திகரிப்பு ஆலையின் மூலம் தேசத்தின் மொத்தப் பெற்றோலிய உற்பத்தித் தேவையை பூர்த்தி செய்தல்.
- ❖ 2030 ஆம் ஆண்டளவில் சக்தியில் சுய தேவைப் பூர்த்தி நாடாக இலங்கையை மாற்றுதல்.

ஏ.கோபிநாத்
தரம் 9C, குழு-1


## Water Cycle

Just Like the other nutrients, water also goes through a never – ending process of recycling itself. Water is available in plenty on the earth in the form of different water bodies such as lakes. rivers, ponds and seas.


With the heat generated by the sun, water changes into water vapor and rises up in the atmosphere. As it rises, it cools down and condenses in to water. The tiny water droplets combine together to constitute clouds. When clouds become on Earth in the form of rain or snow.

## பட்டுப்பூச்சி

பட்டுப்பூச்சி நீ
எங்கிருந்து வந்தாயோ
நல்ல மழை நாளில்
வானில் இருந்து வீழ்ந்தாயோ
வீழ்ந்தாலே சிவந்து ரோஜா
இதழ் போல் - நீ ஆனாயோ?
எங்களோடு மகிழ்ந்து
விளையாடிச் செல்லவந்தாயோ?



க.மோகனதாஸ்
தரம் 7B,குழு-3




**Mas. A.Jevarankan**
Grade 9 A group 1

# உலக சுற்றுச் சூழல் தினம்

இயற்கையை அழித்து
இயற்கை எய்திடாதே மனிதா!!
எரிக்கும் குப்பையில்
இயற்கை மாயுது மறந்திடாதே!!

வரும் போது எதுவும் நீ எடுத்து வரவில்லை
கொடுத்தது எல்லாம் இயற்கை தானடா
அதை கெடுத்துக் கொள்ளாதே மாமனிதா
உருவாக்க முடியா செல்வம் இயற்கை!!

உருவாக்கா விட்டாலும்
உறக்கத்தில் தள்ளாதே
உயிர் கொலை யாகாதே!

அடுத்த தலைமுறை வாழ நீ நினைத்தால்
இந்த தலைமுறையில் மரத்தை
உருவாக்கிட உறுதி கொள்!

பணம் பத்தும் செய்யும்
பசிக்கு உணவாய் பணம் செல்லுமா
இயற்கையை படைத்த இறைவன்
அதை அழித்தல் கண்டு
அமைதி கொள்வானா?

ஆறாம் அறிவே
ஆணவம் கொள்ளாதே
ஆண்டவன் நினைத்தாலே
அரை நொடி போதும்

வாழப் பிறந்தவனே
ஆளுமை பற்றி அறியாதவனே நீ
அழிக்கும் உரிமை ஆக்கியவனுக்குண்டு
அனுபவிப்பவனுக்கு இல்லை

அதனாலே ஆண்டு தோறும்
நினைவூட்டுகின்றோம்
நிறைவேற்றிட உறுதிகொள் இன்றே
உலக சுற்றுச் சூழல் தினம்
நாளைய சந்ததி வளம் பெற
சுத்தத்தை பேணிக் காப்போம்
பேணிக்காப்பதே அனைவருக்கும் நன்மை

ஆ.அமிர்தா
தரம் - 9B



# இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச உடன்படிக்கை

| இல | உடன்படிக்கை | கைச்சாத்திட்ட திகதி |
|---|---|---|
| 1 | ஈரநிலங்களின் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கை– 1971 | 1990-10-15 |
| 2 | உலக கலாசார மற்றும் இயற்கை மரபுரிமை பாதுகாப்பு சம்பந்தமான உடன்படிக்கை– 1972 | 1980-06-06 |
| 3 | ஆபத்தை எதிர்நோக்குகின்ற வனவிலங்கு மற்றும் தாவர இனங்களின் சர்வதேச வணிகம் தொடர்பான உடன்படிக்கை - 1973 | 1979-05-04 |
| 4 | வனசீவிகளின் புலம்பெயர்கின்ற இனங்களின் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கை– 1979 | 1990-06-06 |
| 5 | அபாயமான கழிவுகள் மற்றும் அவற்றினுடைய அகற்றுமையின் அவற்றின் எல்லைக்கப்பால் காவுகையை கட்டுப்படுத்துவது தொடர்பான உடன்படிக்கை - 1989 | 1992-08-28 |
| 6 | ஓசோன் படலத்தினை சிதைவடையச் செய்யும் பதார்த்தங்கள் தொடர்பான வியன்னா உடன்படிக்கை– 1987 | 1989-12-15 |
| 7 | உயிர்ப்பல்லினத்தன்மை தொடர்பான உடன்படிக்கை– 1992 | 1994-03-23 |
| 8 | காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிச்சட்ட உடன்படிக்கை– 1992 | 1993-11-23 |
| 9 | பாலைவனமாதலுக்கு எதிராக போராடுவது தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை– 1994 | 1998-12-09 |
| 10 | எண்ணெய் மூலமான கடல் மாசுறுதலினை கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச உடன்படிக்கை– 1982 | 1983-11-30 |

கி.சர்மிலா


தரம் 9B,குழு-1

# சுற்றாடல் தொடர்பான விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| பெப்ரவரி | 02 - | உலக ஈர நில தினம் |
| மார்ச் | 22 - | உலக நீர் தினம் |
| | 23 - | உலக வானிலை தினம் |
| ஏப்ரல் | 07 - | உலக சுகாதார தினம் |
| | 22 - | உலக புவி தினம் |
| மே | 22 - | சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினம் |
| ஜூன் | 05 - | உலக சுற்றாடல் தினம் |
| | 17 - | பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினம் |
| ஜூலை | 11 - | உலக சனத்தொகை தினம் |
| செப்டெம்பர் | 16 - | உலக ஓசோன் தினம் |
| ஒக்டோபர் | 1வது திங்கட் கிழமை | உலக குடியிருப்பு தினம் |
| | 04 - | உலக விலங்கு தினம் |
| | 16 - | உணவு தினம் |
| நவம்பர் | 15 - | மரநடுகை தினம் |
| டிசம்பர் | 11 - | சர்வதேச மலைகள் தினம் |

செல்வன். அ.பிரணவரூபன்
தரம் 9B, குழு-1





# காரைநகர் பிரதேசத்தில் காணப்படும் சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

காரைநகர் பிரதேசமானது இலங்கைத் தீவின் வடபால் யாழ்குடாநாட்டின் சப்ததீவுகளில் முக்கியமாக விளங்குகின்றது. எமது பிரதேசம் ஆரம்ப காலத்தில் தீவாகவே காணப்பட்டது. இடைக்காலத்தில் பொன்னாலைப் பிரதேசத்துடன் தரைமார்க்கமாக இணைக்கப்பட்டிருப்பதால் காரைநகர் என அழைக்கப்பட்டது. இங்கு சூழ உள்ள கடற்பிரதேசங்களில் அதிகளவான சிறப்பியல்பு வாய்ந்த தாவர விலங்கினங்கள் காணப்படுவது இப் பிரதேசத்தின் முக்கியமான சிறப்பம்சமாக காணப்படுகிறது.

பிரதேசத்தின் நுழைவாயிலை அவதானிக்கும் போது பொன்னாலை சந்திப் பிரதேசம் இங்கு கடல்நீர் மழை காலங்களில் அதிகமாக காணப்படுகின்றது. வெயில் காலங்களில் நீர் அதிகமாக வற்றி சேற்று நிலமாக காணப்படுகின்றது. (*Avecenia*) அவிசீனியா தாவரங்கள் அதிகளவில் கூட்டம் கூட்டமாக காணப்படுகின்றன. இடையிடையே வெயில் காலங்களில் பாலத்தின் இருமருங்கிலும் நீர் வற்றிய பிரதேசங்களில் இவை கூட்டம் கூட்டமாக காணப்படுவது பார்க்கும் போது ஒரு ரம்மியமான சூழலை மனதில் உண்டு பண்ணும். வலந்தலைச் சந்தியை அண்மிக்கும் போது மட்டுமட்டான நீர்ச் சூழலில் அழகிய வண்ண வண்ணப் பறவைகளின் கூட்டம் பார்த்து ரசிக்க கூடியதாக உள்ளது. எமது தீவினுள் முழுமையாக உள்நுழையும் முன்பே பார்ப்போரை கவர்ந்திழுக்கும் ஒரு உயிர்ப் பல்வகைமையை காணக் கூடியதாக உள்ளது.

கூட்டம் கூட்டமாக காணப்படும் அவிசீனியா தாவரங்களும் அதனைச் சூழஉள்ள எதிர்ப்புவித்திருப்பமான அதிகளவு மூச்சு வேர்களும் நீர்வற்றிய பிரதேசங்களில் ஆங்காங்கே திட்டுக்களாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மண்ணில் மண்வளியின் பற்றாக்குறை இருப்பதால் இவ்வேர்கள் தாவரத்தின் வளர்ச்சிக்கு தேவையான வளியை வழங்குகின்றன. இவற்றை விட நீர் வற்றிய காலங்களில் உவர் சேற்று நிலத் தாவரங்களாக ஆங்காங்கே *Salicornia Suaeda* என்பன காணப்படுகின்றன. இவற்றின் தண்டுகள் இலைத் தொழில் தண்டுகளாக சிறப்படைந்து சூழலுக்கு ஏற்ற விதமாக கவர்ச்சியுடன் காணப்படுகின்றது.

அடுத்து சூழல் ரீதியாக எமது பிரதேசத்தினுள் கசூரினா கடற்கரை சுற்றுலா மையம் முக்கியத்துவம் பெறுகின்றது. இது உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்ல வெளிநாட்டு சுற்றுலா பயணிகளையும் மிகவும் கவர்கின்ற ஒரு பிரதான இடமாக காட்சியளிக்கின்றது. இங்கு சூழஉள்ள பிரதேசங்களில் அதிகளவான *Casurina* மரங்கள் அதாவது சவுக்கு மரங்கள் மிக அதியுயர் செறிவில்

காணப்படுகின்றமையால் கசூரினாக் கடற்கரை எனப் பெயர் பெற்றது. எனினும் இவற்றின் எண்ணிக்கையில் அண்மைக்கால இடப் பெயர்வுகள் நாட்டுச் சூழல் ஆகியவற்றின் தாக்கத்தினால் குறைவு ஏற்பட்டிருப்பது உயிர் பல்வகைமையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் புதிய மரங்கள் சமூக ஆர்வலர்களால் நாட்டப்பட்டு பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடற் பிரதேசத்தில் ஏராளமான Marine Angiosperms ஆக *Thalasia, Enhalus* போன்றன அதிகளவில் காணப்படுகின்றன. *Halophila* போன்ற இனங்களும் செறிவடைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இவை அலை அடிப்பின் பாதிப்பில் இருந்து விடுபடுவதற்காக சிலவற்றில் ribban போன்ற இலைப்பரப்பு காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதைவிடவெவ்வேறு வகையாயன அங்கிகள் ஏனைய விலங்குகள் காணப்படுகின்றன. இது ஒரு சிறந்த உயிர்ப்பல்வகைமையை எடுத்துக்-காட்டுகிறது. *Porphyra,Sargassum* போன்ற கபில அல்காக்களும் *Gelidium Grasilaria* போன்ற சிவப்பு அல்காக்களும் அதிகளவில் காணப்படுகின்றன. சில இன தயற்றங்களும் இங்கு காணப்படுகின்றன. இவை பசளையாக பயன்படுத்தக் கூடியவை.

இப் பிரதேசங்கள் உயிர்ப்பல்-வகைமையை சிறந்த முறையில் விளக்கும் ஒரு இயற்கை எழில்சேர் பிரதேசமாக காணப்படுகின்றது, கோவளம் வெளிச்ச வீட்டுப் பிரதேசங்களில் கரையோரமாக அதிகளவு மணலும் அண்மையில் *Ipomea biloba* எனும் தாவரம் பரந்து காணப்படுகின்றது. அழகிய நாவல் நிறப் பூ இதில் கவர்ச்சியாக காணப்படுகின்றது. சூழ உள்ள கடற் பிரதேசங்களில் அதிகளவான உயிர்ப் பல்வகைமையை காட்டி நிற்கின்றன. எமது பிரதேசம் கடற் சூழல் பிரதேசமாக இருப்பினும் சூழல்ரீதியில் அதிக உயிர்பல்வகைமையுடன் கூடிய ஒரு முக்கியத்துவமான பிரதேசமாக காட்சி தருவது ஒரு மகிழ்ச்சியான சூழலை உருவாக்குகின்றது.

திருமதி.சி.வாகீசன்

ஆசிரியர்

# கடற்கரைச் சூழற் தொகுதி

இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சூழல் தொகுதிகளில் கடற்கரைச் சூழற்தொகுதியும் ஒன்றாகும். கடலுடன் இணைந்திருக்கும் நிலப்பகுதி கடற்கரை ஆகும். இலங்கையைச் சுற்றி 1580m நீளமான கடற்கரை இலங்கைக்கு உள்ளது. இக் கடற்கரை பகுதி உவர்நீர்த் தொகுதிகளாக காணப்படுகின்றது. சிறு தீவுகள், குடாக்கள், கடனீரேரிகள், முனைகள், மணல் மேடுகள்,

பவளப்பாறைகள் காணப்படுகின்றது. இவை பல்வேறு நன்மைகளை இலங்கைக்கு வழங்குகின்றது. ஆனால் தவறான பயன்பாட்டினால் அதன் இயல்பு பாதிப்படைந்து செல்வதனால் கடற்கரை சூழல் தொகுதியை பாதுகாத்து பேணுவது அவசியமானதாக மாறிஉள்ளது.

1) கடற்கரை சூழல் தொகுதிகளை
- ❖ பவளப்பாறைகள் - ஹிக்கடுவை
- ❖ கண்டல்கள் - பொத்துவில்
- ❖ முகத்துவாரம், கடனீரேரிகள் - மோதரை, லுனாவை

2) கடற்கரைவலயத்தின் முக்கியத்துவம்
- ❖ உயிரியல் பல்வகைமையைக் கொண்டுள்ளது.
- ❖ துறைமுகங்கள், மீன்பிடித் துறைகள் காணப்படல்
- ❖ மீன்பிடித் தொழில் விருத்தியுற்றிருத்தல்
- ❖ இயற்கை அழகும் பொழுதுபோக்கு மற்றும் உல்லாசப் பயணம் விருத்தி
- ❖ இலங்கை தீவாக இருப்பதால் பல்வேறு பல்லுருவக் கடற்கரை காணப்படுதல்.
- ❖ நாட்டின் 50%மக்களுக்கு அதிகமானோர் கடற்கரைப் பகுதியில் வாழ்கின்றனர்.
- ❖ பலவீனமான சூழல் தொகுதிகள் காணப்படுதல்.
- ❖ பொதுச்சொத்தாக அமைந்திருத்தல்.
- ❖ பொருளாதார முக்கியத்துவமிக்கது.

3) கடற்கரைப் பகுதிகள் அழிவடைய செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.
- ❖ இயற்கை கடல் அரிப்பு ஏற்படுதல். உ-ம் :- மட்டக்களப்பு
- ❖ பவளப் பாறைகள் அகழ்வு அதிகரித்தல்
  உ-ம்:- சீமேந்து உற்பத்திக்கு அலங்காரப்பொருள் சுண்ணாம்பு.
- ❖ கழிவுப் பொருட்களைக் கொட்டுதல் சேருதல் (இரசாயனப் பொருட்கள், நகர கழிவு நீர்கள், பொலித்தீன், வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்டிக் வகைகள்)
- ❖ கடற்கரைகளில் சட்டவிரோத குடிமனைகள், கட்டிடங்கள் அமைத்தல், கட்டிடங்களை திட்டமிடாமல் அமைத்திருத்தல்.
- ❖ துறைமுகங்களில் நிற்கும் கப்பல்களில் எண்ணெய்க்கசிவுகள் கடலில் சேருதல். (கொழும்பு, காலி துறைமுகங்கள்)

4) கடற்கரை முகாமைத்துவம்

இலங்கை ஒரு தீவாகும். இதனால் கூடியளவு மக்கள் சனத்தொகை ஆனது கரையோரப் பிரதேசத்திலேயே வசிக்கின்றனர். இப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு விதிக்குப் புறம்பான அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கமானது சட்டபூர்வமான ஒழுங்கு விதிகளிலும் கொள்கைகளிலும் பல திருத்தியமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இச்செயல்முறையின் முதலாவது நடவடிக்கையாக தனியான ஒரு திணைக்களத்தை உருவாக்கியது. கரையோரப் பாதுகாப்புப் பிரிவை உருவாக்குவதன் மூலம் 1978 இல் கரையோரப் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் மீன்பிடிக் கைத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்பட்டது. 1984 இல் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்

என்ற நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டது. அதன் காரணமாக 1981 இல் கரையோரப் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின் 1990 இல் கரையோர வலய முக்கியத்துவத்திட்டம் கொண்டுவரப்பட்டது. 1997 இல் கரையோர வலய முகாமைத்துவத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. கரையோர முகாமைத்துவச் செயல்திட்டங்களை உருவாக்குவதற்கு இது வழிவகுத்தது.

- 1978 ம் ஆண்டு கடற்கரை பாதுகாப்புச் சட்டம்.
- 1981 இல் 57 ம் இலக்கச் சட்டம்.
- பவளப் பாறைகளை தடுத்தல்.
- கடற்கரை பாதுகாப்பு முறைகளைந டைமுறைப்படுத்தல்.

5) கடற்கரை பாதுகாப்புச் சட்டத்தின் குறிக்கோள்கள்

- கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் மூலம் கடற்கரையோரம் மற்றும் கடற்கரை இயற்கை வளங்கள் முகாமை செய்யப்படுகின்றது.
- திட்டமிட்டு வளங்களை பேணுதல்.
- கடற்கரை வளங்களை ஆய்வு செய்து இனங்காணுதல்.
- கடற்கரை வலயத்தில் மனித செயற்பாட்டுக்குரிய அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- கடற்கரைவள சூழல் பிரச்சனைகளுக்கான ஆய்வுகளையும் தீர்வுகளையும் கண்டறிதல்.
- கடற்கரைவள சூழல் பிரச்சனைகளுக்கான ஆய்வுகளையும் தீர்வுகளையும் கண்டறிதல்.
- கடற்கரை தின்னல் செயற்பாடுகளை குறைக்க உரிய நடவடிக்கைகளை ஏற்படுத்தல்.
- கடற்கரை பகுதி நிலங்களை புனரமைத்து சூழலின் தரத்தை பேணுதல்.
- சட்டரீதியான நிர்வாகம், ஆய்வுகள், கற்கைநெறிகள் எனப் பல்வேறு முறைகள் மூலம் புதிய முகாமைத்துவ செயல்முறைகளை திட்டமிடல்.
- மக்களுக்கான அறிவூட்டல்களை மேற்கொள்ளுதல்.

எனவே தான் கடற்கரைச் சூழற்தொகுதியை பேணிக்காப்பது இன்றைய சமுதாயத்தினரின் தலையாய கடமையாகும்.

திருமதி அ.இராசசிவம்
ஆசிரியர்



# நன்றியுரை


“பசுமை” எனும் இச் சிறுநூல் ஆக்கம் பெறுவதற்கு ஆலோசனை வழங்கிய அதிபர் அவர்கட்கு முதலில் எமது சுற்றாடல் முன்னோடிக் குழு சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மற்றும் இச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய மத்திய சுற்றாடல் சபையின் பிரதிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் அவர்களுக்கும், வட மாகாண சுற்றாட முன்னோடி ஒருங்கிணைப்பாளர் திரு K.A. சிவனருள்ராஜா யாழ் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் திரு பொ.சண்முகதேவன் அவர்களுக்கும் எமது பிரதேச சுற்றாடல் உத்தியோகஸ்தர் திருமதி வி.கல்யாணி அவர்களுக்கும், மற்றும் காரைநகர் சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் திரு.சண்முகம் அரவிந்தன் அவர்களுக்கும், எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,


இச் சஞ்சிகைக்கு பல்வேறு ஆக்கங்களை வழங்கி ஒத்துழைப்பு நல்கிய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்நூல் வெளிவருவதற்கு அனைத்து வழிகளிலும் உதவிய நல் உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

பொறுப்பாசிரியர்கள்
சுற்றாடல் முன்னோடிக் குழு
யா/கலாநிதி.ஆ.தியாகராசா ம.ம.வி
காரைநகர்.



1.1.2013 இல் பாடசாலை சரஸ்வதி வளாகம்



1.1.2015 இல் பாடசாலை சரஸ்வதி வளாகம்









